ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 26—12—43 சுபானு மார்கழி 11—ஞாயிறு | இதழ் 41.

தொடர்கதை

பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுபவனல்ல.

[முன்பு:-லேவாதேவி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரருக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறான். குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. குருக்கள் குமாரகுருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி. வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு, நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளி நடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம் செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், பிறகு……………]

"வாடி சாப்பிட. மணிஎன்ன தெரியுமோ?"

"பார்வதி! என்னைத் தொந்திரவுசெய்யாதே. எனக்குப்பசியே இல்லை."

"பசி இல்லையா! அடி! இந்த நிலைமட்டும் உலகிலே ஏற்பட்டுவிட்டால், சண்டை சச்சரவு, எதுவும் இராது. பசியில்லையாம் பசி! ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய் என்ற பாட்டிமொழி பொய்யா? எழுந்திரடி, கண்ணல்ல! வா! கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கு"

"அப்பப்பா! உன்ரோதனை சகிக்க முடியவில்லையடி. எனக்குப்பசி எடுத்தால் சாப்பிடமாட்டேனா, நான் குழந்தையா, சோறு ஊட்டவேண்டுமா, சந்தமாமா காட்டவேண்டுமா! பசியில்லை போடி என்று சொன்னால்………"

"உன்னைப்பத்தடி பிரம்பினால் கொடுக்கிறேனா"

"அடித்தால்கூடப் பொறுத்துக்கொள்வேன்"

"கடிப்பதுமட்டும் கூடாதோ? உண்மைதான், கன்னத்துக்கு முன்னம்மருந்திட்டுக்கொண்டாயல்லவா?"

"கேலிசெய்யாதே பார்வதி, எனக்கென்னமோ, வாய்ரொம்ப கசப்பாக இருக்கிறது. சாப்பிடப் பிடிக்கவில்லை"

உத்தமியின், வாய்க்கசப்பின் காரணம் யாதோவெனப் பார்வதி உசாவினாள், பயனின்றி—சின்னாட்கள்வரை, ஏதோ நோய்வகைபோலும் என்றெண்ணினாள். ஆனால், கசப்புடன் குமட்டலும் மயக்கமும் வந்திடக் கண்டாள், உத்தமியின் விழியிலே நீர்த்துளிகள் தோன்றிடவுங் கண்டாள், பின்னரே, பார்வதிக்கு உத்தமியின் வாய்க்கசப்புடன் உள்ளக்கசப்பும் உடனிருந்துவருவது தெரியவந்தது. இன்பத்தை அடைய எத்தனித்த உத்தமிக்குச் சுவைகிடைத்ததுடன் சூலும் ஏற்பட்டது. வாய்க்கசப்பும் குமட்டலும், உணவு ஏற்றுக்கொள்ளாமையும், அவற்றின் அறிகுறிகளே. ஆரியசமாஜத்தின் சீரிய ஏற்பாட்டினால், நாம் மணவினை முடித்துக் கொண்டதும், எப்படி - எப்படி இருப்போம் தெரியுமோ! என்னென்ன விளையாட்டுகளிலே ஈடுபட்டு மகிழ்வோம் தெரியுமோ! நமது இன்பம் எவ்வண்ணமிருக்கும் தெரியுமோ! என்றுகூறிக்கூறி நாணமும் சிறுநகையும் உடலைவளைத்து உள்ளத்தை நெகிழச்செய்திட்ட, அந்நிலை எனும் வலையிலே அந்த நங்கையை நரசிம்மன் வீழ்த்திவிட்டான்—வாய்க் கசப்புக்குக் காரணம் அதுவே! உத்தமி, மூன்று மாதம் கர்ப்பம்! கடற்கரைக்காதல் கள்ளங்கபடமறியா உத்தமியின் உள்ளத்தை ஒடியச்செய்துவிட்டது. அவனுடைய அணைப்பும் முத்தமும் கிடைக்கும் வரையிலே, ஆரியசமாஜத்தைப்பற்றியும், கலியாணத்துக்காகக் கிருஸ்தவமார்க்கத்தை விட்டு விலகி மீண்டும் இந்துவாகவேண்டுமென்றும், நரசிம்மன் கூறிக்கொண்டிருந்தவன், உத்தமி, மீளமுடியாத அளவு தன்னிடம் சிக்கிவிட்டபிறகு வேறு பாஷையிலே பேசலானான். "கிருஸ்தவ மார்க்கத்திலிருந்து விலகி, சுத்திபெற்று இந்துவாக நீமாறினால், உத்தமி, ஒருகஷ்டம் இருக்கிறது. நீ, கிருஸ்து மார்க்கத்தைத் தழுவிக்கொள்ளுமுன்பு எந்தவகுப்பினளோ, அதிலேதான் சேரவேண்டும். நீயோ, எந்தவகுப்பிலே பிறந்தவள் என்பது தெரியாதென்று கூறுகிறாய். இது ஒரு தர்மசங்கடமாகிவிட்டது." என்று சாக்குக்கூறலானான். அதுகேட்டு உத்தமி வடித்த கண்ணீர் உலருமுன்பு, "உத்தமி! ஏதோ பிராமணகுலத்தைச் சிலபேர்பழிக்கிறா, அவா, விஷயந்தெரியாதவாளென்று நான் நிச்சயமாகச் சொல்வேன். நேற்று, என் மாமா ஆத்துக்குப்போயிருந்தேன், அவர்மகள், குமாரி குமுதினியின் நாட்டியத்தை கண்டேன், அப்படியேபிரமித்துப் போனேன். ஏதோ தேவலோகத்திலே, அப்சரசுகள் ஆடுவான்னு சொல்வாளே. அந்த அப்சரசுகள் தோற்றுவிடுவா, எங்க குமுதினியிடம். பலே ஜோர்" என்று பேசினான்.

"குமுதினி, சின்னபெண்ணா!"

"ஆமாம், பதினேழு, பதினெட்டு வயதிருக்கும்"

"அழகா இருப்பாளா?"

"அதையேன் கேக்கறேபோ. மகாரூபவதியா இருக்கா. அவமுகத்திலே லட்சுமிகளை தாண்டவமாடுது."

"அவபுருஷனுக்கு என்னவேலை"

"என்னவேலை வேண்டியிருக்கு அவனுக்கு. சதாசர்வகாலமும் அவளோடு சரசமாடிண்டிருந்தாலே போதும். [வேறு வேலைக்குப் போகத்தான் மனம்வருமா"

(2ம் பக்கம் பார்க்க)

பார்வதி பி. ஏ;

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒரு வேலையுமின்றிச் சும்மாவா இருக்கிறான்"

"யார்?"

"குமுதினி புருஷன்"

"அடெ, பைத்யமே. அவளைக் கலியாணம்செய்துக்கொள்பவன் அவளிடம் சொக்கிவிடுவான் என்பதைச் சொன்னேன். அவளுக்குத்தான் இன்னம் கலியாணம் ஆகவில்லையே!"

"ஏழை வீட்டுப்பெண்ணோ?"

"நல்லகேள்வி கேட்டேபோ, என்ஜினியர் வேதாந்தாச்சாரியாரின் மகளன்னோ குமுது! வேந்தாந்தாச்சாரி, யார்தெரியுமோ? ஜட்ஜு சடகோபாசாரியார் தம்பி! பெரிய இடமன்னோ? மாயவரம் பக்கத்திலே அவாளுக்குப் பெரிய மிராசு இருக்கு. மோட்டார் மூன்று, அவாவீட்டிலே"

"அழகு, அந்தஸ்து எல்லாம் இருக்கும் அந்தப்பெண்ணுக்கு. ஏன் இன்னம் ஒரு இடம் ஏற்படாகவில்லை"

"எப்படி ஆகும்? அவாளுக்குக் குமுதினியை, எப்படியாவது, எனக்குத்தர வேண்டுமென்று எண்ணம். நான் என்ன செய்வேன்? அவா, கேட்கும்போதெல்லாம் முடியாது, முடியாதுன்னு சொல்லிண்டு இருக்கேன். உயிரை வாங்கறா" என்ற உரையாடல்மூலம், தனக்குக் கலியாண மார்க்கட்டிலே கிராக்கி இருப்பதையும் கூறினான். கடைசியில் ஸ்ரீஜத் நரசிம்மனுக்கும், ஸ்ரீமதி குமாரி குமுதினிக்கும், விவாகசுப முகூர்த்தம் நடந்தும் விட்டது. வாய்க்கசப்பும் மனக்கசப்பும், உத்தமிக்கு அதிகரிக்காமலிருக்குமா! உண்மை தெரிந்தபிறகு, பார்வதி, அது பற்றி மேலும் விசாரிப்பது, உத்தமியின் உள்ளத்திலே வேல்புகுத்துவதாகுமென்று கருதினாள். உத்தமியின் நிலைமை கண்டு, வருந்தினாள். தன் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாததால் உத்தமியின் வாழ்க்கையிலே பேரிடி விழுந்ததுகண்டு கலங்கினாள். விஷயமோ, வெளியேதெரியக்கூடாது. தெரிந்தால்,மானம்போகும், மூடிவைக்கவும் முடியாது, கருவளர்ந்து கொண்டிருக்கிறது! இந்நிலையிலே, யாரிடமும் யோசனை கேட்கவும் முடியாது, என்செய்வார்கள், அந்த இளம் பெண்கள்? தற்கொலை தவிர வேறோர் வழியும் இல்லை என்றாள் உத்தமி! நம்பிக்கைத் துரோகம்செய்த நயவஞ்சகன் நரசிம்மனின் கொடுஞ்செயலை, மக்கள் மன்றத்திலேகூறி அவனைப் பழிதீர்க்கலாமென்றாலோ, அச்செயல் அவனுக்கு இடருண்டாக்குவதுடன், உத்தமியையும் ஊராருக்குக்காட்டிக் கொடுப்பதுபோலாகிவிடும். தேள்கடியால் தேம்பவும் பயந்துதிகைக்கும் கள்வன்போன்று இருந்தது உத்தமியின் மனம். தனதுநிலை அறிந்தால், ஆசிரியைத் தொழிலையும் அதிகாரிகள் பறித்துக்கொள்வர். அன்போடு,தன்னைவளர்த்துப்படிப்பீந்துஉதவிய பாதிரிகளும் பகைப்பர், பிழைப்பும் மானமும்போய், இருப்பிடமின்றி அலையும் அபலையாக வேண்டிவருமோஎன்றஞ்சி, உத்தமி, தீயில்வீழ்ந்த சேயானாள், பருவச்சேட்டையினை அடக்கமுடியாது இப்பாழ் நிலைபெற்றேன், என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள். இனிமையாகப் பாடி இரையை மயங்கச்செய்யும் பறவைபோல, நரசிம்மன் காதல் கீதம்பாடிக், கருத்தைக் கெடுத்துப்பிறகு கைவிட்டானே, என்னேஅவனுடைய கன்னெஞ்சம், என்றுகூறிக் கசிந்துருகினாள். இக்கதி தனக்கு நேரிடாமுன்னம், அவன் என்னென்னகூறினான், எவ்வண்ணம் ஆடினான் என்பதை எண்ணி, நயவஞ்சக நாடகத்தை அவன் எவ்வளவு திறம்பட நடித்தான் என்பது தெரிந்து தேம்பினாள். அவளுடைய கலக்கத்தையும் கண்ணீரையும் பொருட்படுத்தாமல், நரசிம்மனின் நயவஞ்சகத்தைப்பற்றி சட்டைசெய்யாமல், சமூகம் பழிக்குமோ என்ற பயமின்றி, கருவளர்ந்துவந்தது. உட்புறத்திலே உலவும் கருவின் அறிகுறி வெளிப்புறத்தால் காண்போருக்கு விளங்கும் காலம், கடுவேகத்துடன் வந்தது.

"ஒருகாரியம் செய்உத்தமி! ஆறுமாதத்திற்கு லீவ் எடுத்துக்கொள்; இருவரும் வெளியூர் செல்வோம். பிறகு நடக்க வேண்டியதை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று பார்வதி யோசனைகூறினாள். எதிர்த்துப் பேசியதன்விளைவால் வேதனையடைந்த உத்தமி, பார்வதியின் யோசனையைக்கேட்டதும், சிறு குழந்தைபோலத்தலைஅசைத்தாள், சம்மதம் என்று. அவளுடைய பரிதாபத்தைக் கண்ட பார்வதி, உத்தமியை அருகிலழைத்துத் தன்மீதுசாய்ந்திருக்கச்செய்து, நெற்றியைத் தடவிக் கண்களைக் துடைத்து, "கண்ணே, உத்தமி! கலங்காதே. நெடுநாட்களாகவே, கன்னிப்பருவத்தை இப்படித்தான் ஆண்கள் சூறையாடி இருக்கிறார்கள். செல்வக்குடியிலே இது நடந்திருப்பின், பணமெனும் திரையிட்டுப் பக்குவமாக இதனை மூடிவிட்டிருக்கமுடியும். பழியும் பயமும், அங்கே அண்டிட அஞ்சும். நாமோ ஏழைகள். நம்மைக் கண்டிக்கவும், இழிவாகப் பேசவும், சாஸ்திரங்களையும் சன்மார்க்கத்தையும் போதிக்கவும் பலர் முன்வருவார்களேயன்றி, இரக்கங்காட்ட ஒருவரும் முன்வரமாட்டார்கள். ஆகையினால், நாமேதான் இதற்குப்பரிகாரம் தேடிக் கொள்ளவேண்டும். நீ, பயப்படாதே. பயந்து இனி என்னஆகும்? அந்தப் பாதகனின் செயலைமற. இனி ஆகவேண்டிய காரியத்தைக் கவனிப்போம். நீமுதலிலே, லீவ்கிடைக்கும்படி ஏற்பாடு செய்துகொள்" என்று பரிவுடன் கூறினாள். வலியுள்ள இடத்திலே அன்புடன் தடவிக்கொடுத்தால், வலிநீங்காவிட்டாலுங்கூட, ஓரளவு நிம்மதிஇருப்பதுபோல, உத்தமிக்குப் பார்வதியின் பேச்சு, எவ்வளவோ ஆறுதலைத்தந்தது. இந்தப் பார்வதியும் இல்லாவிட்டால், தற்கொலை தவிற, வேறென்னசெய்து கொண்டிருக்கமுடியும், அந்த பரிதாபத்துக்குரிய உத்தமியால். யாரையேனும் கொட்டிவிட்டபிறகு, தேள், அவன் எப்படித் துடிக்கிறான் என்னமருந்து தேடுகிறான், என்பதைக்காண விரும்புகிறதா? வேலைமுடிந்ததும் வேறிடம் செல்லும். அதுபோல, உத்தமியின் வாழ்வை வதைத்த அந்த வன்னெஞ்சன், அவள் என்ன கதியானாள் என்பதையும் எண்ணவில்லை; குமாரி குமுதினியிடம் குலவிக்கிடந்தான். அதுமட்டுமா! அவளிடம், தனது வீர தீரப் பிரதாபங்களைக் கூறுகையிலே, தன்னிடம் எந்தமாதும் மையல் கொள்வர் என்று பெருமைபேசி, உத்தமியின் கடற்கரைக் காதலையும் கூறினான். தனது நாயகனின், தீயசெயலைக் குமுதினிகண்டிக்கவில்லை. அது, தன்கணவனின் திறமைக்கோர் அத்தாட்சி என்று எண்ணியதுடன், உத்தமியைப் பார்த்துப் பேச வேண்டும், என்று தீர்மானித்தாள்.

லீவ்கேட்க, அன்று உத்தமி, தலைமை ஆசிரியை வீட்டிற்குச் சென்றிருந்தாள். பார்வதிமட்டுமே வீட்டிலே, ஏதோ படித்துக்கொண்டிருந்தாள். வீட்டருகே ஒரு அழகியமோட்டார் வந்துநின்றதைச் சாளரத்தின்மூலம் கண்டபார்வதிக்குப் பார்த்திபனோ என்று பயம்பிறந்தது. அழகிய ஒருபெண், மோட்டாரிலிருந்து இறங்கி அங்குமிங்கும் பார்த்துவிட்டு, வீட்டிற்குள் நுழையக்கண்ட பார்வதி, யாரோ, என்னவோ, என்று தெரியாதவளாய், நாற்காலியைத்துடைத்து ஒருபுறம் போட்டுவிட்டு, மரியாதையாக வந்தவளை வரவேற்றாள். வந்தவள், பார்வதியை, ஒருவிநாடி, ஏறஇறங்கப்பார்த்துவிட்டு, "உத்தமிஎன்பது, நீதானே?" என்று கேட்டாள். "இல்லை. என்பெயர் பார்வதி. உத்தமி என்சிநேகிதி. இங்குதான் இருவரும் வசிப்பது. அவள் வெளியேபோனாள். வந்துவிடுவாள், உட்காருங்கள்." என்று பார்வதி உபசரித்துவிட்டுத் தங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமோ, என்று கேட்டாள். "என்பெயர் குமுதினி" என்றுரைத்தாள் வந்தவள். மரியாதையை மட்டுப்படுத்திக்கொண்டு பார்வதி, "நரசிம்மனின் நாயகியா? இங்கே, வந்தகாரணம்?" என்று கேட்டாள். கேட்கும்போதே, பார்வதியின் உள்ளம் பொங்கஆரம்பித்தது, உத்தமி விஷயமாக, நரசிம்மன், வம்பளக்கவும் துணிந்துவிட்டான் என்பதறிந்து.

"ஆமாம். அவருக்கு உத்தமி தெரியுமாம். நான் உத்தமியைக்காணவே இங்கு வந்தேன்" என்று குமுதினி கூறினாள்.

(8-ம் பக்கம் பார்க்க)

வர்ணஸ்ரமம் ஒழிக.

3—பாதன்.

அழகான அந்திவானம்! ஆற்ருேரத்திலே நாரை; கவலையுடன். கண்கள் முழுதும் திறந்துமில்லை, முழுதும் மூடியுமில்லை. கபடம் நிறைந்தவிழி, நாரைக்கு. நின்ற கோலத்திலே, தவங்கிடக்கிறது நாரை; சாதாரண ரிஷிகள்போல, தனது முக்தி கோரியல்ல! ஆற்றிலே துள்ளிக்குதித்து அல்லற்படும் மீன்களுக்கு, முக்தி தர!! எந்த ஆற்ருேரத்திலும், பிற நீர்நிலையங்களிலும், நாரை நின்றிடும் இக்காட்சியை எவரும் காணலாம். கல்லெடுத்து வீசிடின், நாரை சென்றுவிடும், ஆனல் கவிதையை வீசி, அந்தக் காட்சி, என்றும் கருத்துள்ளோரின் மனதைவிட்டு அகலாதவண்ணம் ஒருவர் நாரைக்கு "அமரத்துவம்" அளித்துள்ளார். நாரை மீனைக்கொத்தித்தின்பதற்காக, அடக்கமே உருவானதுபோல, ஆங்கு காத்திருக்கிறது. அதன் தீயஎண்ணம் துளியும் வெளியே தெரியாதபடி. நாரை, நடிக்கிற நேர்த்தியைக் கவிஞர் காணுகிருர். மீன்தேடிடும் நாரை, ஆற்றுநீரிலே இறங்கி அலையக்காணேம், வட்டமிடவுமில்லை, பதைக்கவில்லை, வேறுஏதோ காரியத்துக்காக், அல்லது வெறும் பொழுது போக்குக்காக அந்த ஆற்ருேரத்தை அடைந்ததுபோலப் பாவனை புரிகிறது. அந்த நாரையின் நினைப்பு முழுதும், மீனின்மீது! நடிப்போ, சர்வபரித்தியாகத்துக்கும் தயாராக இருப்பதுபோல்! இதைக்கண்ட கவிஞர், பறவை இனங்களிலே, இவ்வளவு கபடம் கற்றதாக நாரை இருப்பதுபோல, மக்களிலே, யார்உளர், என்று எண்ணும விருப்பாரா? கற்ருேர்க்கும் மற்றையோர்க்கும், இதுதானே வித்யாசம்! கற்ருேர், காட்சியுடன்கருத்தினைப் பிணைப்பர், மற்றையோர், காண்பர், களிப்பர், மறப்பர்! கவிக்கு, ஆற்ருேரத்திலே நாரை நிற்கும் காட்சி, வஞ்சகத்தை மறைக்கும் நடிப்பு, மக்களிலே ஒருசாராரின் மனப்பாங்கையும்நடவடிக்கையையும் நினைவூட்டுகிறது. உவமைகண்டு உளம்களிக்கிருர். இயல்பினுல்மட்டுமே உவமையன்று! இடமுங்கூட, ஒன்ருகவே இருக்கும் உவமை அவருக்குத்தோன்றுகிறது, அதே ஆற்றங்கரைகளிலே, செவ்வானம் தோன்றும் வேளையிலே, நாரைபோலவே, நினைப்பை நடிப்பால் மறைக்கும் ஒரு கூட்டத்தாரின் குணம் அவருக்கு நினைவிற்கு வருகிறது, ஒரு நேர்த்தியான கவிதையும் பிறக்கிறது, கவிஞனின் உள்ளத்திலிருந்து.

"பொன்மலைசூடர் சேரப்
புலம்பிய விடனேக்கித்
தன்மலைந்துலகேத்தத்
தகைமதியேர்தரச்
செக்கர்கோள் பொழதினு
ஞெலி நீவியிளநாரை
முக்கோல்கோள் அந்தணர்
முதுமொழி நினைவார்போ
லேக்கர்மேலிறை கொள்ளு......"

நாரையைக் கண்டதும், பார்ப்பனரின் நினைவு, கவிக்கு! ஆற்ருேரத்திலே, அந்திவானத்திலே, நிற்கும்நாரை, மந்திர உச்சாடனம் செய்வதுபோன்ற பாவனையுடன், நீர்நிலையங்களருகே நித்த நித்தம் அமர்ந்துள்ள, பார்ப்பனரின் உருவம் போன்றிருந்ததாம் கவிக்கு! எந்தக்காலத்துக்கவி? கலித்தொகைகாலம்!! அந்தக் காலத்திலேயே, ஆரியஇனம், காரியம் பலிக்கக் கபடவேடமிட்டுக்கிடந்தது என்பதற்குச் சான்றுகள் அனேகமுண்டு. இன்றும் அந்த இயல்பு கொஞ்சமும் மாருந்தானிருக்கிறது. நாரைபோல நின்றிருக்கும் நடிப்புத்திறனை அந்தஇனத்தவர் செம்மையாகச் செய்வர்.

கலைஎனும் அருவியோரத்திலே, ஆரிய நாரைகள் அமர்ந்துள்ளன; கலையருவிக் காட்சியிலே, தம்மை மறந்திருப்பதாகப் பாவனை! முதுமொழி நினைவார்போல், கலையின்பத்தையேநினைத்த வண்ணம், ஆரியநாரைகள் அமர்ந்துள்ளன. இரையும்வேண்டாம் இந்த இன்பமேபோதும், என்று கூறுவர்! இதிலுள்ள உண்மையின் உயர்வும், நேர்த்தியும், வேறுஎதிலே காணமுடியும்என்றுரைப்பர். வேருென்று வேண்டாப்பாரபரங்களாக, கலைவழிபாடன்றிப் பிறிதோர் பெறத்தக்க பேறில்லை என்ற பெருங்குணவான்களாக, மனஇருள், கலைஒளிபட்ட மாத்திரத்திலே, அடியோடு தொலைந்த [illegible] யும் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றுபதேசிக்கும் உத்தமர்களாக, அறிவு பெரிது, அதனினும் பெரிது அறிவின் பயனுகவிளையும் ஆனந்தம், அதனினும் பெரிது, அந்த ஆனந்தத்தை அனைவரும் பெற்றிடச்செய்தல் என்று கூறிடும் ஆசிரியர்களாகக் காட்சியளிப்பர். அவர்தம் நெஞ்சமோ, ஓர் எரிமலை! விழியோ, எவர் உழைப்பை எங்ஙனம் எய்த்துப் பெறுவது என்ற தந்திரத்தைக்கக்கும் குழிகள்! அருவியோரத்து நாரையின் நினைப்புத் துள்ளிக்குதித்திடும் மீனினத்தின்மீது! ஆரிய நாரைகட்கோ, கலையருவியில் குளித்து இன்புறவேண்டிவரும், தமிழனைக் கொத்தித்தின்பதன்றி வேறில்லை. கலையருவியே, இக்காரணத்திற்குத் துணையாகயிற்கிறது. கடிவாளத்திற்கு வாய்திறந்தபிறகு, குதிரையின் கொட்டம் அடக்கப்படுவது ஆச்சரியமாகுமா? மூக்கணங்கயறுக்குச் சம்மதித்தபிறகு, மூலைவாரினுல், சாட்டை தானே பேசும்! அதுபோலத்தான், கலையருவியிலே நீந்திமகிழத் தொடங்கிவிட்டால், ஆரியநாரைகளின் கூரியமூக்கின் வேலையும் தொடங்கும். கலையருவி, அங்ஙனமுளது, இங்கு. எனவேதான், "சரி, சரி, செட்டியாரே! கலைஉணர்வு பெற்று வருகிறீர்களல்லவா! அந்த உணர்வு இன்னம் கொஞ்சம் அதிகரிக்கட்டும், பிறகு ஆரியத்திராவிடப்போராட்டத்திலேஉமக்கிருக்கும் ஆர்வம், பஞ்சாகப்பறக்கிறது பாரீர்" என்று மித்திரன் கூறுகிறது.

"ஒரேஒரு செங்கல் பெயர்த்து விட்டால் போதும்!" என்று கருக்கலிலே நின்று கன்னமிடும் கள்ளன் கூறுவான்.

"கண்சிவந்துவிட்டது. கைகால் துடிக்கிறது. பேச்சும் படபடக்கிறது. இன்னம் ஒரேஒரு கிளாஸ் குடித்துவிட்டால் போதும், ஆசாமி, கீழேசாய்வான், பிறகு, அகப்பட்டதைச் சுருட்டலாம்" என்று, மதுவைஊற்றி முடிவைத்தடவும் தடியர் கூறுவர்.

"இப்போதுதான் என்னிடம் அவருக்குப் பிரேமை அதிகரிக்கிறது. இது இன்னம் கொஞ்சம் வளர்ந்துவிட்டால் போதும், பிறகு நான் சொன்னபடி ஆடுவார், சொத்துமுழுவதையும் எழுதிக்கொடுத்தாகவேண்டும் என்று கட்டளையிட்டாலும் தட்டாமல் செய்வார்" என்று கண்வெட்டால் கருத்தை வெட்டிய காமக்கள்ளி, தன்னிடம் சிக்கிய சீமானைக் குறித்துக் கூறுவாள்.

"முகத்திலே இன்னும் ஒரேஒரு குத்து விழுந்தால்போதும், ஆசாமி கீழேவிழுவான். தங்கத்தோடாவும் வெற்றிமாலையும் நமக்குத்தான்" என்று கூறுவான், குத்துச்சண்டைப் பந்தயத்திலே ஈடுபட்டவன்.

"இன்னம் சிலநாட்களில் ஆசாமி சிவலோகப்பிராப்தியடைவான். பிறகு[illegible] சீமான், நம[illegible]வாழ்வு என்று [illegible]யின் வாரசு, கூறுகிருன்.

இந்த "ரகங்களிலே" எதை நீங்கள், மித்ரன்வாசகத்திற்கு உவமையாகக் கொள்வீர்களோ, எனக்குத் தெரியாது தோழர்களே! எனக்கென்னமோ, இவ்வளவும் இன்னும் பலவும் தோன்றின, மித்திரன், சர். சண்முகம், பண்டைக்காப்பியங்களை மேலும் நன்ருகப்படிப்பாரானல் வர்ணஸ்ரமக் கோட்டையைத் தகர்க்க வேண்டுமென்ற நினைப்பையே விட்டுவிடுவார், என்று எழுதி இருந்ததைப் படித்ததும், சூட்சமமின்றிச் சுதேசமித்திரன் எழுதாதே! வீணுக்கு வார்த்தையை வீசிடாதே. இந்தவாசகத்திற்கு விசேஷார்த்

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி 26—12—43 ஞாயிறு

கட்டிலறையருகே!

★

"போடி உள்ளே! போ! என்னடிஅது, நான் நாலுநாழியா சொல்லிண்டிருக்கேன், நீ தடியாட்டமா இங்கேயே நின்னிண்டு, பேந்தப் பேந்தவிழிக்கிறே. ஏண்டி, ராஜு! சுத்தஅசடாயிருக்கே. அவன் தான் பிடிவாதக்காரனு இருக்கான். நாமும் அப்படியே இருந்தா, காரியம்நடக்குமோ? மடமடன்னு உள்ளே போ, விளக்கைச்சிறிசாக்கிட்டு, விசிறி எடுத்துண்டுபோய் பக்கத்திலே உட்காரு. கர்மம், கர்மம்! இவ்வளவுகூடத் தெரியாதாடி உனக்கு? எல்லா இழவையும் சொல்லித்தரவேண்டுமா?"

"சீனுப் பாட்டி, நேக்கென்னமோ வெட்கமா இருக்குடி, ஏண்டி, அவர், ஒரு வார்த்தைகூடச் சொல்லக்காணுமே, நானுகவலியஎப்படியடியுள்ளேபோவது.'

"அடி அசடே! சிலசமயங்களிலே இப்படித்தான் இருப்பா புருஷா. சரின்னு நாமும் பிகுவாவே இருந்தோமானு, குடும்பம் நாசமாகாதோ, வெட்கமென்னடி உனக்கு. ஏண்டி ராஜு புதிசாவா பழகப்போறே. ஆடிப்பாடிண்டு உன்னிடம் அன்பாக இருந்தவன்தானே. ஏதோ, போறுதவேளை, சண்டை போட்டுண்டேள், சண்டைன்னு ஒரு சமாதானம் வேண்டாமோ? புருஷா கொஞ்சம் கோபமா இருந்தா, நாம்தான் கொஞ்சம் அடங்கிப்போகணும், பிறகு அவா, நம்ம இஷ்டப்படி ஆடமாட்டாளோ! போடி! போய், பால்சாப்றேளான்னு கேளு."

"சீனுப்பாட்டி! நேக்கு, மானம்போற மாதிரி இருக்கு. நான் கதவை எத்தனை தடவை தட்டினேன் தெரியுமோ. தூக்கம்பிரமாதமாஇருக்கோன்னு கூடக்கேட்டேன்."

"என்னபதில் சொன்னான்?"

"வாயைத் திறக்கவேயில்லை."

''ராஜு, நோக்கு வரவரப்புத்தி தீட்சணியமே இல்லை. அவன்தான், கோபமா இருக்கானே, அவனைப்போய், தூக்கம் பிரமாதமோன்னு ஏன் நீ கேக்கணும் சொல்லு. பேசாமல்போய்ப் பக்கத்திலே படுத்துண்டா, அவனு கேப்பன், யாரதுன்னு; வேறேயார்வந்து உம்மபக்கத்திலேபடுப்பான்னு சொல்றது, சிரிப்பான், அவ்வளவுதானே, சண்டை ஏது பிறகு."

"அப்படி இலச்சைகெட்டு, ஏன்போகணும்னேன், அவர் கொஞ்சம்கூடச் சட்டைசெய்யக்காணோம். வலியவலியப் போய் அவரோடுபேசுவாளாக்கும். சீனுப் பாட்டி, நேக்கு வேண்டாம்போடி, அவர் உறவு"

"ஏண்டி, மொட்டைமுண்டைமாதிரியாப்பேசறே. அவன் உறவுவேண்டாம்னு சொல்லிட்டா, நாளைக்கு வேறே கலியாணம்செய்துண்டா உன்பாடு என்னாகும். அடி! பைத்யக்காரி! எதைக்கவனிக்காமே போனாலும், வாழ்வைக்கவனிக்க வேண்டாமோ? வீண்கௌரவம் எதுக்கடி உதவும்? நம்ம சுகத்துக்கான காரியத்தை நாம்தானே கவனிச்சக்கணும்"

"நேக்கு என்னமோ........."

"நோக்கு என்ன? இல்லை, என்னடி நோக்கு இப்போ? நான்என்ன தெருவோடே போறவனையா, கைபிடித்திழுக்சொன்னேன். இதிலே போய் மீன மேஷம் பார்ப்பாளோ?"

"இப்போ, இப்படி வலியவலியவந்து பேசறயே, முன்புஏண்டி, மகாரோஷக்காரியா வெளியே போனேன்னு அவர் கேட்டாரானு........."

"கேட்டா என்னடி! முன்னாலே இருந்தபடி இருக்கணும்னு சாஸ்திரமாக்கும். அதையெல்லாம் காதிலே வாங்கிண்டிராதே, பேசாமே போய்ப்படு. வீணாகக் கெட்டுப்போகாதே. காலம் இப்போ ரொம்பக்கோளாறு இருக்கு. வரவரக்குடும்பம் பெரிசாறது. புத்தியாப் பொழைக்கணும், அதைக்கவனிச்சு நடடி, முட்டாளே! போ, உள்ளே."

படுக்கையறைக்கு வெளித்தாழ்வாரத்திலே, இலச்சையுடன் நிற்கும் ராஜு எனும் நங்கைக்கு, சீனுப்பாட்டி எனும் மூதாட்டி, கோபமாக உள்ளேபடுத்துக் கொண்டிருக்கும் புருஷனிடம் வலியச் சென்றாகிலும் உறவாடாவிட்டால், வருங் காலம் இடர்மிகும் என்று புத்திகூறுகிறாள். வெறுத்துத்தள்ளும் புருஷனிடம் வலியச்சென்று பேசுவது வெட்கங் கெட்ட காரியமல்லவா, என்று ராஜு கேட்க, வெட்கத்தை இந்தச் சமயத்திலே கவனித்தால், குடும்பம் கெட்டுவிடுமே, என்று பாட்டிபதிலுரைக்கிறாள். இந்தப் படுக்கையறைப்பேச்சு, எங்கேநடப்பது, என்று கேளாதீர்! அன்பர் ஆச்சாரியார் கூட்டம், அரசிழந்து இருப்பது கண்டு அங்கலாய்த்துக்கொண்டு, மகாகனம் சீனுவாசசாஸ்திரியார், சென்றகிழமை ஓர் அறிக்கை வெளியிட்டார். அதனைக் கண்டபோது, நாம்மேலேதீட்டிய உரையாடல்போன்று, அறிக்கையின் வாசகங்கள் தொனித்ததுடன், முடுக்குடன் படுத்திருக்கும் புருஷனிடம் வெட்கத்தை மறந்துசென்று சேரும்படி, சச்சரவு செய்துவிட்டுச் சோகித்த பெண்ணுக்குச் சமயமறிந்து நடந்துகொள்ளடி என்று பாட்டி புத்திகூறுவதுபோன்ற காட்சி, நமக்குத் தோன்றலாயிற்று.

மகாகனம் சாஸ்திரியார், மாஜிகனம் ஆச்சாரியார் பதவியிழந்து நிற்பதுகண்டு பரதவிக்கிறார். ஆச்சாரியார் காங்கிரஸ், சாஸ்திரியாரோ மிதவாதி—முன்னவர் ஏகாதிபத்ய ஒழிப்புவீரர், பின்னையவரோ ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளை. இருவரும் வேறுவேறுகட்சி என்றாலும், அந்த இனப்பாசம் விடுமா? ஆச்சாரியார் கூட்டம் ஆளவேண்டுமென்றஆசை, சாஸ்திரியாருக்கு நிரம்ப இருக்கிறது. ஆட்சி செய்த ஆச்சாரியார் அவசரப்புத்தியினால் இருந்ததை இழந்துவிட்டு முச்சந்திகளிலே முழக்கமிட்டுவருவது, சாஸ்திரியாருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதிகாரம்எனும் ஆணழகனை விட்டுப் பிரிந்து வாழ்வது, பிற்கால சுகத்தைக் கெடுக்குமே என்று சாஸ்திரியார் பிரலாபித்து, வெட்கத்தைவிட்டாகிலும்வலியச் சென்றாகிலும், அதிகாரத்தைக்கைப்பற்ற வேண்டும்என்று, இராஜகோபாலாச்சாரியார் கோஷ்டிக்கு உபதேசிக்கிறார். அந்த உபதேசமொழிகளை ஊன்றிக் கவனிப்போருக்குப், பிகுவுடன் இருக்கும் பேத்திக்கு, அனுபவமுள்ள பாட்டி, படுக்கையறைப்பாசத்தைப் பற்றிய தந்திரத்தைக் கூறுவதுபோல இருப்பது விளங்கும். இதோ, மகாகனத்தின் மணிமொழிகள் சில, ஆழ்ந்து சிந்திக்கக்கோருகிறோம்.

"நமது நன்மைகள் மிகவும் பாதிக்கப்படும்தருவாயில் இருக்கின்றன.

நாம்தான் முன்னேறிநடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இதுவிஷயத்தில் மீனமேஷம்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது.

கௌரவம், முன்னுக்குப்பின் விரோதமில்லாமலிருப்பது இதுபோன்ற காரியங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதற்கு இதுசமயமில்லை.

நான் ஒன்றும் தவறான காரியத்தைச் செய்யும்படி தூண்டவில்லை.

வீண் கௌரவத்தைமட்டுமே பின்பற்றிக்கொண்டு விடாப்பிடியாக இருக்கக்கூடாதென்றே நான் சொல்லுகிறேன்.

பணிந்துபோதுமறை அகௌரவமானதல்ல."

டிசம்பர் 16ந்தேதி, முட்டுக்கட்டைதீர, முதியோர் சாஸ்திரியார் விடுத்துள்ள நீண்ட அறிக்கையிலே, மேலே காணப்படும் வாசகங்கள் உள்ளன. **வலியச்சென்று வசப்படுத்து-வெட்கத்தை விடு-முன்பின்பாராதே**-என்ற பாட்டி மொழிக்கும், சாஸ்திரியாரின் வாசகங்கட்கும், ஏதேனும் வித்யாசம் காணமுடிகிறதா, என்று கேட்கிறோம். எவ்வளவு இலச்சையற்ற இயல்பு! ஏனோ இவ்வளவு பதவிமோகம்! உதைக்கும் காலுக்கு முத்தமிடும் போக்கு! எலும்புத்துண்டுக்கு

வாலைக்குழைக்கும் குக்கல் குணம்!! இவ்வளவு பச்சையாகப் பதவிமோகம் கொண்டிருந்தும், அதைவெட்கமின்றி வெளியே கூறியுங்கூட, இக்கூட்டத்திற்குக் கெட்டபெயர் கூறுபவனின் நாக்கு அறுக்கப்படும் நிலைமைதானே இன்றும் இங்கு இருந்திடக்காண்கிறோம். சர்க்காராக வலியப்பதவிகளைக் கொடுத்திட்டபோது; அதிலே சென்று அமர்ந்ததற்காக, ஜஸ்டிஸ்கட்சியினரை, இக்கூட்டம், எவ்வளவு வசைபாடிஇருக்கிறது. இன்று, கூச்சமின்றி, "வேண்டாம்போ" என்று விரட்டுபவனிடம், சிரித்துப்பேசிச் சரிப்படுத்திக்கொள் என்று கூறுகிறது, என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம்.

"சொல்வதைக் கேளடி, கேளு-செட்டி வருவான், தலையைச்சீவிப் பொட்டிட்டுக்கொண்டு வாடி, வா" என்று சிந்தாமணிக்குத் தாய்க்கிழவி கூறினளே, அதற்கும் "மீனமேஷம் பாராமல் நாமாகச் சென்று, வீண்கௌரவத்தை மறந்துகாரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும்" என்றுகூறும் மகாகனத்தின் மொழிக்கும், பாலில் வித்யாசம் இருக்கிறதேயன்றி, "பண்பிலே" என்ன வித்யாசமிருக்கிறது என்று கேட்கிறோம். இவ்வளவும் இதற்குமேலும் செய்தாலும், பழியுரையோ கண்டனமோ, அவர்களை அண்டுவதில்லை, காரணம் என்ன? தமிழர்களிலே தற்குறிகள் அதிகம், ஆட்டிவைத்தபடி ஆடுவர், "ஆமாம்சாமி" கூறுவர் என்ற துணிவன்றி, வேறு, என்ன கைமுதல் இருக்கிறது இந்தக் கனபாடிக் கூட்டத்திடம்.

எந்த அளவுக்கு வெட்கத்தை விட்டு விடும்படி, மகாகனம், மாஜிகனத்துக்குக் கூறுகிறார் என்பதைச் சற்றுக் கவனியுங்கள். பதவி பெறவேண்டுமென்றால், பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம்இசையவேண்டும். அந்த அதிகாரபீடமோ, இன்று, அமெரி, சர்ச்சில் என்பாரிடம் இருக்கிறது. அவர்களுடைய நம்பிக்கையும் ஆதரவையும் பெற்றால்தான், பதவியைக் காங்கிரசார் பெறமுடியும். ஆகவேதான் ஆளுக்கு ஆள், நாள்தோறும், இவ்விருவருக்கும் தெண்டனிட்டுத் துதிப்பதும், சித்தம் இரங்கவில்லையோ, சத்தம் செவிக்கு வரவில்லையோ? என்று திருமுறைபாடுவதுமாக உள்ளனர். அவர்களை, மகாகனம் சாஸ்திரியார் வர்ணித்திருக்கும் வாசகம், இதோ தந்திருக்கிறோம். "சர்ச்சிலும் அமரியும் ஏதோ அதிருஷ்டவசத்தால் கொழுத்து அகம்பாவத்துடனிருக்கிறர்கள்" எவ்வளவு வாய்க்கொழுப்பு விலங்கைமான் வயோதிகருக்கு என்று நாம் கூறவில்லை. இவ்வளவு "கொழுத்து அகம்பாவத்துடன்" இருக்கும் சர்ச்சில் அமெரியிடம், இந்தச் சாஸ்திரியார், இலச்சையைவிட்டு, மேல்விழுந்து சென்று, பதவிபெறுமாறு, அன்பர் ஆச்சாரியாருக்குக் கூறுகிறாரே, அவ்வளவு ஈனத்தனத்துக்கு, ஆச்சாரியார் இசைவார் என்ற நம்பிக்கை, சாஸ்திரியாருக்குப் பிறந்தகாரணம் என்னவென்று கேட்கிறோம். கொழுத்து அகம்பாவத்துடன் இருப்பவரையே, கூடிச் சுகம்பெறக் காங்கிரஸ் காரிகையை, கட்டிலறைக்குள் புகச்செய்யும் கன்னியமான காரியத்தைச்செய்யும் மகாகனம் சாஸ்திரியாருக்கு, பெண்ணின் அருமை அறிந்து அகங்குழையும் மாப்பிள்ளை கிடைத்தால், காங்கிரஸ் பெண்ணைத்தூக்கிக்கொண்டுபோய்க் கட்டிலின்மீது போட்டுவிட்டுக் கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு வந்துவிடுவார்போலும். என்ன கேவலம்! எவ்வளவு மானத்தை மறந்தசெயல்!! இதைச்செய்யத்தானு, மகாகனமானர்? பதவிமோகத்தினல், பல்லைச்சாட்டி, மேலாடையைக் கீழே நெகிழவிட்டு, "கொழுத்து அகம்பாவத் தோடிருக்கும்" பேர்வழிகளைக், கைபிடித்திழுத்துக் கலவிக்கழைக்கும் காரிகை, அரசியல் வியபசாரி, என்ற நிலையிலே, இன்று காங்கிரஸ் இருக்கிறது. இது கேவலம்! ஆனல் இந்த வியபசாரத்திற்குத் தரகுபாத்யதை கொண்டாடுகிறாரே, தள்ளாடும் சாஸ்திரியார், அதை என்னென்பது!!

மகிழ்நன் மறைவு.

"மகிழ்நன்" என்ற புனைபெயருடன் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைப், பகுத்தறிவுக்கு வழிகோலும் முறையில், 'செந்தமிழ்ச்செல்வி' என்னும் திங்களிதழில் எழுதித் தமிழ்நாட்டவர்க்கு, நடுநிலைதிறம்பாத முறையில் அறிவுச்சுடர் கொளுத்தியவரும்; வேலூர் வூரீஸ் கல்லூரித் தலைமை ஆசிரியராகப் பலகாலம் அலுவல் பார்த்தவரும்; அண்மையில் வேலூர் மாவட்ட யுத்தப்பிரசார அமைப்பாளராக இருந்து நாட்டுப் பணியாற்றியவருமான அறிஞர் தோழர் K. P. சந்தோஷம், B.A; L.T; அவர்கள் கடந்த 14—12—43ல் திடீரென இயற்கை எய்திய செய்தி எம்மை ஆற்றொணுத்துயரத்திற்குள்ளாக்கிற்று.

மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் கட்டுரைகளை மன்பதைக்குதவிய மகிழ்நனின் மறைவு, உண்மையிலேயே தமிழ்நாட்டுக்கு ஒருஈடு கொடுக்கமுடியாதநஷ்டமாகும். அவருடைய ஆழ்ந்தகருத்தோடு கூடிய அழகிய கட்டுரைகள் ஒவ்வொன்றும், படிப்பவர்கட்கு நகைச்சுவையையும், பொருட்சுவையையும் தந்து, மக்களைப் பகுத்தறிவென்னும் பாதையில் கொண்டுவந்துவிடுவதாகவே இருக்கும்.

தோழர் மகிழ்நன் அவர்கள் கிறித்தவ வகுப்பைச் சேர்ந்தவர். ஆனல் அவருடைய அறிவுச்சுடர், அவர், இன்ன வகுப்பைச் சார்ந்தவர், என்று எவராலும் சொல்லமுடியாத முறையில் பிரகாசிக்கிறது. தோழர் மகிழ்நன் அவர்களால் எழுதப்பட்ட "மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்ற சிறந்தநூலே யாம் கூறும் உண்மைக்குச் சான்ருகும். எல்லார்க்கும் எல்லாத்துறையிலும் நண்பராய் இருந்து நல்லறிவு வழங்கிய தோழர் மகிழ்நன் அவர்களின் மறைவால் வருந்தும் அவருடைய துணைவியாருக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வர்ணஸ்ரமம் ஒழிக!

3-ம் பக்கத் தொடர்ச்சி.

தமின்றி, மித்திரனில் இடம்பெருதே, என்று எண்ணியே ஏங்கினேன். சென்ற கிழமையே உம்மிடம் இயம்பினேன், இக்கிழமை, அதுகுறித்துச் சிந்தித்தேன், செக்கர்கொள்வானமும், சிந்துபாடும் சிற்ருறும், நின்றிடும் காரையும், நினைவிலே கின்றன!

சர்ச்சில்.

முதலமைச்சர் மிஸ்டர் சர்ச்சில் அவர்கள், சிறிதுநாட்களாக இன்புளுயன்சா சுரத்தால் பீடிக்கப்பட்டு, இப்பொழுது குணமடைந்து வருகிறர்.

வேவல் தம்பதிகள்.

வைஸ்ராய் தம்பதிகள், வடநாட்டிலுள்ள பல மகாணங்களைப் பார்வையிட்டு உணவு நெருக்கடியின் நிலைமைகளைக் கவனித்துவிட்டு டில்லி திரும்பினர்கள். உணவுப் பஞ்சத்தைப் போக்கடிப்பதற்கான யோசனைகளையும் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

பழவனக்குடி திராவிட வாலிபர்சங்க ஆரம்பவிழா.

டி சங்கஆரம்பவிழா பழவனக்குடி போர்ட் பாடசாலையில், 15-11-43 மாலை 5-மணிக்கு திருவாரூர் க. ம. சங்க காரியதரிசி தோழர் வி. எஸ். பி. யாகூப் தலைமையின்கீழ், ஆரம்பமாயிற்று டி. சங்கத்தின் வேலைத்திட்டங்களைப்பற்றி, டி. பாடசாலை ஆசிரியர் பி. தேவதாஸ் சென்னை விவசாயத் தொழிலாளர்சங்க ஜில்லா காரியதரிசி எம். பாலு ஜோதி பாவலர் டி. பாடசாலை உதவிஆசிரியர் தமிழ் செல்வ ஆசிரியர் மனோகரன், முருகேசன், ராசு, மரிமுத்து அந்தோனி, நடேசன், முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் செஞ்சிலுவைச்சங்க திறப்புவிழாவும் நடந்தேறியபின் தலைவர் முடிவுரையுடன் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இரவு 9-மணிக்கு முடிந்தது. திராவிடவாலிபர் சங்கத்துக்கு டி. தலைவர் காரியதரிசி கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பார்வதி பி. ஏ;

(8-ம் பக்கத்தொடர்ச்சி.)

"என்ன யோசனை?" என்று கேட்டாள் பார்வதி! கோபங்குறையாத நிலையிலே."

"எனக்கு ஒரு கீர்த்திவாய்ந்தலேடி டாக்டர் தெரியும்" என்று மெள்ளக்கூறினாள் குமுதினி.

"அவளைக்கொண்டு கருவைச்சிதைத்து விடலாம். அதுதானே உன்னுடைய அருமையான யோசனை" என்று பார்வதி கேட்டாள், கோபம் வளரத்தொடங்கிய நிலையிலே. குமுதினியால் பேசமுடியவில்லை.

"அனுபவமா" என்று வெடுக்கெனக் கேட்டாள் பார்வதி.

"நீசுத்த அதிகப்பிரசங்கி. ஏதோ என்னாலான உதவியைச் செய்யலாமென்று வந்தால், திமிராகப்பேசிக், காரியத்தைக் கெடுக்கிறாய். அவளும் நீயும் எக்கேடு கெட்டால்தான் எனக்கென்ன! உத்தமிக்கு இன்னம் மணமாகவில்லையே, ஊர் அறிந்தால் அவளைத் தூற்றுவதோடு, எவனும் கலியாணத்துக்கு ஒப்புக்கொள்ள மாட்டானே, என்றுநான் ஒரு யோசனை செய்து அவளுக்கு ஒரு பாதகமும் நேரிடாதபடி ஒரு காரியம்செய்ய நினைத்தால் நீ, வள்ளெனவிழுந்து என்னைக்கடிக்கிறாயே. லேடிடாக்டர் என்றுநான்பேச்சுத் தொடங்கியதும், கருவைச் சிதைக்கச் சொல்கிறேன் என்று நீயாகத்திடீரென்று நினைத்துக் கண்டபடிபேசுகிறாய். உன்னைப்போன்ற அவசரப்புத்தியுள்ளவரிடம் பேசுவதே மகா ஆபத்து. உத்தமிக்கு என்னநேரிட்டால் எனக்கென்ன? நானே அவள் பள்ளிக்கூட அதிகாரிகளிடம் போய், விஷயத்தைச்சொல்லி, மானத்தை வாங்குகிறேன், பார். என்உதவியை நீ வெறுத்துத்தள்ளிவிடலாம், ஆனால் என் விரோதம் உங்களை இலேசில் விடாது" என்று குமுதினி கோபமாகப் பேசினாள். பார்வதி, யோசித்தாள். குமுதினி உண்மையிலேயே, உத்தமிக்கு மேலும் கெடுதல்செய்துவிட்டால் என்ன செய்வதுஎன்றுபயந்து, இனிச்சற்றுப்பக்குவமாகவே நடந்துகொள்ளவேண்டும் என்று நினைத்து, "குமுதினி! நீ, லேடி டாக்டர் என்று சொன்னதும், நான் தவறாக எண்ணிக்கொண்டேன். கருவைச் சிதைப்பது ஈனத்தனமான காரியமாயிற்றே, அதைச்செய்யச் சொல்கிறாயே என்று கோபங்கொண்டேன்" என்று கூறினாள். "நான் உத்தமியின் கருவைச் சிதைக்கும் கொடுஞ்செயலைப் புரியச் சொல்லவில்லை. பிறக்கும் குழந்தைக்குச் சுகமான, அந்தஸ்தான இடம் கிடைக்கும் வழியைக்கூறுகிறேன். பிராமண குலத்திலே, அந்தக்குழந்தை வாழவும், உத்தமி ஒருதாயானாள் என்ற விஷயமே உலகுக்குத்தெரியாதிருக்கவும் வழிசொல்கிறேன். இதோ, பார்வதி! இக்கடிதத்தைப்படித்துப்பார்!" என்றுகூறிக்கொண்டே குமுதினி, தன் மணிபர்சிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துப்பார்வதியிடம் கொடுத்தாள். கடிதத்தைப் படித்த பார்வதி, ஒருவாறு விஷயம் தெரிகிறது என்றுகூறினாள் புன்சிரிப்புடன். அக்கடிதம்வருமாறு.

பெங்களூர்.

அன்புள்ளள குமுதினிக்கு, லட்சுமி நாராயணனருளால் சகல சம்பத்தும் கடாட்சமும்கிடைக்க ஆசீர்வதித்து, ஆண்டாள் எழுதிக்கொண்டது. என்னுடைய சுகதுக்கத்திலே உனக்குள்ள விசேஷ அக்கரைக்காக, நான் என்ன பிரதிபிரயோஜனம் செய்யப்போகிறேன். என்னைவிட நீவயதிலே சிறியவளானாலும், புத்தி தீட்சணியமுடையவள். உன்கலியாணத்தின்போது நான் வந்திருந்த சமயம், நீஎனக்குச் சொல்லிக் கொடுத்த தந்திரத்தால், வீட்டிலே எனக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. என்புருஷர், நான் கர்ப்பவதியாக இருக்கிறேன் என்று சந்தோஷமாகவும், பெருமையோடும் இருக்கிறார். முன்பெல்லாம் முகத்தைச்சுளித்துக் கொள்வார். இந்த நாலுமாதங்களாக சிரித்துக் கொண்டு பேசுவதும், அன்பாக நடத்துவதுமாகஇருக்கிறார். இரண்டாம் கலியாணம் என்ற பேச்சேகிடையாது. சுவர்ணவிக்ரஹம் போலக்குழந்தை பிறக்கும், என்று சொல்கிறார். அதுவும் ஆண் பிள்ளைதானும்! அடி குமுது! என்னுடைய இந்தஆனந்த வாழ்வு, இன்னும் எத்தனைநாள் நடக்கும்? என்குறுது தெரிந்துவிடுமே. அப்போது என்னசெய்வது? அவர் எவ்வளவு நம்பிக்கொண்டிருக்கிறார், தெரியுமோ? லேடிடாக்டரிடம்காட்டவேண்டுமாம். அவள் என்மானத்தை வெளிப்படுத்திவிடுவாளே, அப்போதுஎன்ன செய்வது. லேடிடாக்டர், உனக்குத் தெரிந்தவள்தானும். ஆகவே, நீ பெங்களூர்வந்து, அவளுக்கு, உண்மை கூறி, என்னைக் காப்பாற்றவேண்டும். இன்னும் இரண்டோர் மாதங்களுக்குப் பிறகு, ஏதோ உடற்கோளாறால், கருச் சிதைந்துவிட்டது என்று, அவருக்குக் கூறிவிடலாம். அதற்கு அந்த லேடிடாக்டர் உதவிசெய்யவேண்டும். உடனேவர வேண்டுகிறேன், உன்னால்தான் இதுமுடியும், அசாரசியமாக இராதே. உனக்குக் கோடிபுண்யம் உண்டு.

இப்படிக்கு
ஆண்டாள்.

[தொடரும்.]

பொங்கல் புதுவருடத்தில்

"முத்தமிழ்க்கலா வித்வரத்ன"

டி. கே. எஸ். சகோதரர்களின்
புதிய நாடகங்கள்!

1944, ஜனவரி 1உ முதல்

1. வீர சிவாஜி!
(By T. V. ரெத்தினசாமி)

2. காளமேகம்!
(By T. K. முத்துசாமி)

3. பில்ஹணன்!
(By A. S. A. சாமி)

ஈரோடு சென்ட்ரல் தியேட்டரில்.

உரிமையாளர்:—T. K. S. சகோதரர்கள்.

நே—8. தோழர் கலியாண சுந்தரனுக்கு

கைவல்யம் கடிதம்.

இதற்குமுன் எழுதிய கடிதத்திற்கு உதாரணமாக ஒன்றை எழுதுகிறேன்.

"ஆதிசிவன் பெற்றுவிட்ட பிள்ளை, அரிய மைந்தன், அகத்தியனென்றோர் வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறைமேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்."

"மூன்று குலத் தமிழ் மன்னர்என்னை மூண்ட நல்லன்போடு வளர்த்தார், ஆன்ற மொழிகளிலுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்" என்று தமிழ் சொல்லுகிறது. இந்தப் பாடல் பாரதியார் பாடினது. இதையும் எழுதி இதற்குக்கீழே சிவனும் பார்வதியுமாகப் படம் போட்டு, அவர்கள் மடியில் தமிழ்க் குழந்தை இருப்பதாகக் குழந்தைப் படமும் போட்டு, இதற்கு முன்னால் அகத்தியர் என்ற ரிஷிபடமும் போட்டுச், சிவனும் பார்வதியும் பெற்ற தமிழ்க் குழந்தையை அகத்தியரிடம் கொடுப்பது போலும், அகத்தியர் வாங்குவதுபோலும் காட்டிக் "கல்கி"என்கிற பத்திரிகை பிரசுரித்திருக்கிறது.

சிவன் தமிழை உண்டுபண்ணினர், ஆரியர் என்கிற அகத்தியப் பார்ப்பான் கண்டு மகிழ்ந்து இலக்கணம் செய்து கொடுத்தார்; மூன்று தமிழ் மன்னர்கள் வளர்த்தார்கள். எல்லாப்பாஷைகளிலும் மேம்பட்ட ஆரியத்துக்கு நிகராகத்தமிழ் வாழ்ந்தது என்பது பாட்டின் அர்த்தம். சிவன்பெற்ற தமிழை முதற்கண்டது ஆரிய அகத்தியர், அகத்தியருக்குமுன் இலக்கணம் இல்லை; அகத்தியருக்குப் பின்தான் மூவேந்தர்களும்தமிழைவளர்த்தார்கள். எல்லா பாஷைகளுக்கும்முதன்மையாகிய ஆரிய பாஷைக்கு நிகராக ஆரியரால் தமிழ் வாழ்ந்ததாம் என்பது கருத்து. இதை நீங்களும் மற்றத் தமிழ்ப் பண்டிதர்களும் நினைவில் வைத்துத் தமிழர்களுக்குச் சொல்லவே எழுதுகிறேன்.

பாரதியாரை எனக்கு நேரில்தெரியும். மயிலாப்பூர் "குட்வின்" என்கிற கோவிந்தராசுப்பிள்ளையின்மருந்துஷாப்பில்,டாக்டர் நஞ்சுண்டராவின் உதவியால்நானும் அவரும் 35 வருடங்களுக்கு முன் இருந்தோம். இராஜாங்கத்தின் நிற்பந்தத்தால் புதுச்சேரிக்குப் போனார்; அங்கிருந்து வெளியில்வர முடியவில்லை. மன எண்ணங்களைச்சொல்ல இடமில்லை; எண்ணங்கள் உள்ளே அடங்கிக்கிடந்தன. அவ்வெண்ணங்களைப் பாட்டாகப் பாடினர். அதை அருளென்று பார்ப்பார்கள் எவ்வளவு தூக்கவேண்டுமோ அவ்வளவும் தூக்குகிறார்கள். கம்பருக்கு சரஸ்வதி பாடிக்கொடுத்தபாட்டென்றார்கள் கம்ப இராமாயணத்தை. பார்ப்பார்கள் ஆதிகாலம்தொட்டே தங்கள் எண்ணங்களின் பலத்திற்கு அருளென்றும், தேவவாக்கென்றும், அசரீரியென்றும் சொல்லுவார்கள். அருள் என்பது சனங்களை மருளவைப்பதற்குத் தெரிந்தோ தெரியாமலோ சொல்லுவதே ஒழிய, அருள் என்பதற்கு உண்மையான அர்த்தமில்லை. திருவண்ணாமலையிலிருக்கும் ஒரு சன்யாசியைத் தூக்கித்தூக்கி ஆகாசத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து, ரமணரிஷி என்கிற பெயரையும் கொடுத்தார்கள்; அன்னிய தேசத்துயாத்திரைக் காரர்களுக்குக் காட்சிப் பொருளாகவும் காட்டினார்கள். அவர் எழுதிக்காட்டுவதற்கும், சாடை காட்டுவதற்கும், பிரமசொரூபம்,ஞானம், மாயை, அஞ்ஞானம், பந்தம், விட்டுவிடுதல், குருபூசை, கைங்கரியம், அன்பு என் பலவைகளே அர்த்தமென்று பக்கத்திலிருப்பவர்கள் சொல்லுவதுமாகவிருந்தது. இப்படி இருந்தும் அவருடைய அருளும் ஞானமும் ஆகாசத்தில் நிற்கவில்லை. பூலோகத்திலிருந்துகொண்டு அவர் தம்பிக்கு மடத்தின் நிர்வாகமும் பாத்தியதையும் சாசனமும் எழுதிவைத்தார். அவர் மடத்தையும் அதன் சொத்தையும் அவருக்குமுன் உதவியளித்த திருவண்ணாமலைச் சந்நியாசிகளுக்குக் கொடுக்கவேண்டும், இதற்கு ரிஷியாகவேண்டியதுகூட வேண்டாம், உண்மை நியாயமுடைய மனிதர்களே செய்யக்கூடிய காரியம், இப்படியே நமது நாட்டில் அநேக ரிஷிகளும் அருளுமுண்டாக்கப்பட்டிருக்கின்றனர். இதுபாடறியாமல்சுகவாழ்வுவாழப் பலருக்கு உபயோகப்படுகிறது.

அகஸ்தியர் இலக்கணம் செய்தார், தமிழ்தந்தார் என்பதைப் பாரதியார் கேட்டும் படித்துமிருப்பதாலும், பிர்மன் உயிர்தந்தான், பிராமணன்அறிவுதந்தான், பிர்மா வேதம்செய்து பிராமணரிடம் கொடுத்தார், பிர்மா உலகத்திற்கு அதிகாரி, பிராமணன் அறிவிற்கு அதிகாரி, இவைபோன்ற இன்னும்பல பார்ப்பார்களின் சொந்தப்படிப்பானதாலும், சகல பிராணிகளுக்கும் தலைவனாகவும், வேதமான களஞ்சியத்தின் காவலனாகவும்பிராமணன் படைக்கப்பட்டிருப்பதால், இப்பூமியிலுள்ள ஒவ்வொருபொருளுக்கும் பிராமணன் உரிமைஉள்ளவனாவான் என்கிற வேதப்பிரமாணத்தாலும் பாரதியார் பாடிய அகத்தியர்கதை அப்படி இருக்கிறது.

கற்பனா சக்தியால் கட்டிவிட்டபொய், அகத்தியர் கதையை நம்பிக்கொண்டிருக்கும் பண்டிதர்கள் காதில் அதுபட்டுக்கொண்டேயிருக்க, அந்தப்பொய்யை ஒருபடிமேலே முன்கதைக்கு விரோதமாக எழுதுகிறார்கள். அவர்கள் உயர்விற்கு அப்படிச் செய்வதில் வழக்கப்பட்டவர்கள், அப்படித்தான் செய்வார்கள். நமது ஜனங்களின் புத்திப் போக்கும் உங்கள் வாக்கின்போக்கும் அவர்களுக்குத் தெரியும். அதற்குப்பதில் சொன்னால் முன்போல் தண்டனையுமில்லை, முன்னைவிட இப்பொழுது அறிவும் விசாலப்பட்டிருக்கிறது. நாங்கள் பதில்சொன்னால் அவர்களுக்கு முன்னின்று நீங்கள் எங்களைக் கலைப்படிப்பில்லாதவர்கள் என்கிறீர்கள். கலைப்படிப்பும் உணர்ச்சியும்வந்து தமிழுக்குத் தொண்டுசெய்து மணிமாலைவாங்கிக்கொண்ட தாங்களோ இதில்மௌனமாயிருக்கிறீர்கள், இதைத் திருத்துவதெல்லாம் உங்கள் வேலையல்லவா, அங்கல்லோ உங்கள் பண்டிதத்திறமைசெல்லவேண்டும், சென்றால் அல்லவா தமிழுக்கும் எங்களுக்கும் நன்மையுண்டாகும்.'

ஆதிசிவன் தமிழைப்பெற்றான், பிர்மாவும் சரஸ்வதியும் சமஸ்கிரதத்தைப் பெற்றார்கள், விஷ்ணுவும் லெட்சுமியும் தெலுங்கைப்பெற்றார்கள், சாமுண்டீஸ்வரி கன்னடத்தைப் பெற்றாள், பகவதி மலையாளத்தைப்பெற்றாள். இப்படியே உலகத்திலுள்ளஎல்லாப்பாஷையும் அதனதன் கடவுள்பெற்று, அவரவர்களுக்குக் கொடுத்ததாகச் சொல்லுவதில்லை. அதிலும் சிவபெருமான் தமிழைப்பெற்றார், அதைக்கண்டு ஆரியனென்கிற அந்தணன் மகிழ்ந்து அதற்கு இலக்கணம் செய்து மூவேந்தர்கையில் வளர்க்கக்கொடுத்தார் என்பதுதான் ஆச்சரியம். மற்ற எந்த நாட்டிலும் அந்தணர்களில்லை, இருந்திருந்தால் அவர்கள் கையில்தான் அந்தத் தெய்வங்கள் கொடுத்திருக்கலாம், அந்தத் தெய்வங்களைப் பின்னால் தெரிந்துகொள்ளுவோம்.

சிவபெருமான் வடக்கேவந்து உட்கார்ந்தார், தெற்கே தூக்கிற்று, அகஸ்தியரைக்கூப்பிட்டுத் தெற்கே போயிருந்து சமப்படுத்தச்சொன்னார், தெற்கே தமிழ் பாஷையும் அதன் இலக்கிய இலக்கணங்களும் நிறைந்த பண்டிதர்களுமிருப்பார்களே, அங்கேநான் எப்படிப் போவது என்று அகஸ்தியர் சிவபெருமானைக் கேட்டார். அகஸ்தியருக்குச் சிவபெருமான் தமிழ் உபதேசம்செய்தார். அகஸ்தியர் இலக்கணம்செய்து கொடுத்தார் என்பது கதை. இதைத்தான் திருச்சிப் பண்டிதர் நாட்டாரும்செந்தமிழ்ச்செல்வியில் முன்னெழுதியிருந்தார். இப்படியே பண்டிதர்கட்கும் பாடமாயிருக்கிறது. அந்த அகஸ்தியர் இலக்கணம் இப்பொழுது இல்லை மகா உபாத்தியாயர் தென்தேசமெல்லாம்தேடிஎடுத்த எங்க ஏட்டிலுமில்லை. இந்தப்பொய்யை நமது பண்டிதர்களே நிலைநிறுத்தினர்கள். இப்படிவந்திருக்கும் பொய்யை நிலைநிறுத்தாமலிருக்க

(8-ம் பக்கம் பார்க்க.)

கைவல்யம் கடிதம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் படிப்பும் ஆராய்ச்சியும் உபயோகப்படவேண்டுமென்றே இதையெல்லாம் தங்களுக்கு எழுதுகிறேன். எங்களைக் கலைஉணர்ச்சி இல்லாதவர்களென்று நீங்களே சொல்லுகையில் அதற்குப் பதில் சொல்லக்கலையுணர்ச்சியும் வளர்ச்சியும் வந்த உங்களுடைய பண்டிதத்திறமை தானே அதற்குப் பதில்சொல்லவேண்டும்; அப்பொழுது எங்களுக்குச்செய்த பாவமும் பரிகாரமாகும் அகஸ்தியர் மூலமாக வகுப்புவாதத்தை நுழைக்கிறார்கள், இவர்களையும் அடியோடு தொலைக்கவேண்டுமென்று எந்த ஆச்சாரிகள் கூப்பிட்டாலும் போய்விடாதீர்களென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

அகஸ்தியர் கலசத்திலிருந்து பிறந்தவர் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு புராணத்திலும் அகஸ்தியர் இருக்கிறார். ஒவ்வொரு புராணத்திற்கும் மத்திய இடைவெளி பலவருடம். பிர்மாவிடம் இராவணன் மூன்றரைக்கோடி வருடம் வரம்கேட்டு, அரைக்கோடிபெற்று வருகையில் அகஸ்தியர் இராவணனைச் சந்திக்கிறாராம், இராமரையும் காட்டில் பார்க்கிறார், இதற்குமுன் மதுகைடவன் என்கிற ராட்சதனை விஷ்ணுகொல்லுகிறார், அங்கு அகஸ்தியர் வருகிறார். மது, கும்பகர்ணனாகவும், கைடவன் அதிகாயனாகவும் பிறந்ததாகக் கதை. இரண்யன் காலத்திலும், சூரபத்மன் காலத்திலும், அகஸ்தியர் வந்ததாகக் கதை. பாரதத்திலுமிருக்கிறார், தமிழைச் சிவபெருமானிடம் வாங்கிப் பொதிகைக்கு வந்திருக்கிறார். மகா பண்டிதர் மீனாட்சிசுந்தரம்பிள்ளைபாடின தலபுராணங்களிலுமிருக்கிறார். இதை எல்லாம் கணக்குப்போட்டால் அகஸ்தியருக்கு வயது இலட்சக்கணக்கென்று சொல்ல முடியாது, கோடிக்கணக்கென்றே சொல்லவேண்டும். இதை இது வரையிலும் நீங்களும் நம்பிக்கொண்டிருந்தீர்கள். அந்த உளவுதெரிந்துதான் இனியும் அதற்குமேற்படியில் நம்பச் சொல்லுகிறார்கள். கலையுணர்ச்சியும் கலைவளர்ச்சியும் எங்களுக்குக் கற்பிப்பதற்கு மத்தியில், நமது நாட்டு-நமது அழகு முருகன்வேதக் கடவுளான தேவேந்திரன் மகள் தெய்வயானையைக் கலியாணம் செய்துக்கொள்ள ஏற்பட்ட விஷயங்களை விபரமாகச் சொல்லுங்கள். அநேக சதுர்யுகம் வடதேசத்துச்சிவபெருமான் யோகம்செய்து நமதுதேசத்து முருகனைப் பெற்றாரே, அந்தமுருகனுக்கு அங்கே அப்பன் சொத்து ஒன்றுமில்லையே. குடியிருக்க நல்லவீடுகூட இல்லையே! இங்குவீடு, பெண்சாதி, பள்ளியறை, பஞ்சாமிர்தம், பால்காவடி, எல்லாமிருக்கிறது. அவ்வளவு சௌக்கியமிருந்தும் தமிழ்ப்பாஷை இனியும் ஏன் கற்றுக் கொள்ளவில்லை என்பதையும் கலைப்படிப்பில்லாத எங்களுக்குச் சொல்லுங்கள்.

இங்ஙனம்,

கைவல்யம்.

பார்வதி பி, ஏ;

2-ம் பக்கத்தொடர்ச்சி.

"முன்காலத்திலே, அரசர்கள், யுத்தத்திலே ஜெயித்தபிறகு, தோற்றமன்னனுடைய ஆடைஅணிகளைத், தேவிமார்களிடம் காட்டுவார்களாம். அதுபோல, உன் கணவன், உத்தமியைப்போய்ப் பார்த்துக்களிக்கும்படி உன்னை இங்கு அனுப்பினான் போலும். குமுதினி! நீயும் உத்தமிபோலவே ஒரு பெண்தான்! அவளுடைய நிலையைக்கண்டால், எவர் மனமும் பதறும். அவளை எப்படியும் மணம் செய்து கொள்வதாகவாக்களித்து, வஞ்சித்து, பணத்தில் புரளவேண்டுமென்ற பேராசையால், நரசிம்மன் உன்னைக் கலியாணம் செய்துகொண்டான். இவ்வளவு கொடியவனுக்குப் பெண்டான நீயோ, உன்கணவனின் கயமையால் கலங்கும் காரிகையைக்காணவந்திருக்கிறாய்! நன்று நன்று! நட, இந்தவீட்டைவிட்டு. என் கோபம் அதிகரிக்குமுன்பு போய்விடு. நான், உத்தமிபோல, பொறுமையுள்ளவளல்ல. போ, வெளியே" என்று பார்வதி கூறினாள். குமுதினி, கோபங் கொள்ளவில்லை. வெளியேபோகவும் முயற்சிக்கவில்லை. நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு,புன்னகையுடன், 'எனக்கென்னதெரியும், பழயகதைகள். தெரிந்தாலுங்கூட, அதற்காக, நரசிம்மனைக் கலியாணம் செய்துகொள்ளமுடியாது என்று நான்சொன்னாலும், வீட்டிலே, கேட்பார்களோ? ஆண்களுக்கு இது சகஜம் என்று கூறுவார்கள். நான் இங்கு வந்ததுகூட, உத்தமிக்கு ஏதேனும் உதவி செய்யலாம் என்பதற்காகத்தான். கேலி செய்யவா, வந்தேன். உன் சிநேகிதியின் துயர்கண்டு, நீகோபிப்பது சகஜம், வருத்தப்படுவது முறைதான். ஆனால் ஒன்று யோசி. நரசிம்மன்செய்த குற்றத்திற்காக, எனக்குத் தண்டனை தருவதா? பார்வதி! உனக்கு இருக்கும்அளவு, எனக்கு, உத்தமியிடம் அன்பிருக்கமுடியாது, என்றாலும், அவள் நிலைமையை நரசிம்மன் கூறினதுகேட்டபிறகு, எனக்குப் பச்சாதாபமாகத்தான் இருக்கிறது. மேலால் என்னசெய்வது என்பதை யோசித்து, இருவரும்கலந்து, ஏதேனும் செய்யலாம். வீண்கோபத்தால் என்ன நடக்கும்? எனக்கு ஒருயோசனைதோன்றுகிறது,அதன்படி செய்தால், எல்லாம்சுபமாகமுடியும்" என்று குமுதினிகூறினாள்.

6-ம் பக்கம் பார்க்க.



பவுன்நிறமுள்ள

கிளி மார்க் பட்டணம் பொடி

தென்இந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும்
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்.

நீ-1. பவுன்கலர் வீசை 1க்கு ரூ. 8—8—0. நீ-1. கருப்புநிறம் வீசை1க்கு ரூ. 8—0—0.
நீ-2. பவுன்கலர் ,, ரூ. 7—0—0. நீ-2. கருப்புநிறம் ,, ரூ. 6-12—0.

ஏஜண்டுஇல்லாஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன் கம்பெனி,

9-வெங்கடாசல நாய்க்கன்தெரு, பழய வண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.